**தலவாகலை லிந்துல நகர சபை**
**நுவரெலியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 ஏப்ரல் 11 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தலவாகலை லிந்துல நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 2,425,000 பெறுமதியான கணக்கு விடயமொன்றும் ரூபா 6,939,495 பெறுமதியான 02 நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திரட்டிய நிதியத்திற்கு ரூபா 345,165 ஆன தேறிய தாக்கம் உறுதிப்படுத்தப்படும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் நிர்மாண கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரையான காலவீச்சொன்று கடந்திருந்த போதும் ரூபா 1,633,428 நிர்மாணக் கடன்பட்டோர் | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். | கடன்பட்டோர் தெரியப்படுத்தப் பட்டுள்ளதுடன் பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை.

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டு முதல் 07 ஆண்டுகள் வரையான காலம் கடந்துள்ள ரூபா 818,775 ஆன செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகள் தீர்வுசெய்யப்படாமை | செலுத்தவேண்டிய மீதிகள் தீர்வுசெய்யப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருத்தமான வகையில் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக் சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 189 மற்றும் 486 | ரூபா 557,217 பெறுமதியான மதிப்பிழந்த காசோலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த காசோலைகள் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 396(இ) | ரூபா 16,080 பெறுமதியான வழங்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சிய காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த பெறுவோர் தெரியப்படுத்தப்பட்டு மேலும் மாற்றப்படாத காசோலைகளை வைப்புக் கணக்கிற்கு மாற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 | வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 78,378 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காலாவதியான வைப்புக்களை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் | செல்லுபடிக் காலம் முடிவடைந்த 03 வியாபாரங்களுக்காக புதிய சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் | வியாபாரங்கள் தொடர்பாக கணிப்படொன்று மேற்கொள்ளப்பட்டு சுற்றாடல் | 02 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசயையினால் |

| | | | |
|---|---|---|---|
| செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரம். | வழங்கப்பட்டிருக்க வில்லை. | அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும். | வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு சுற்றாடல் அனுமதிப்பத்திர மாதிரி சபையிடம் இல்லாமல் இருந்ததுடன் ஏனைய சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக வியாபாரிகள் தெரியப்படுத்தப்பட்ட போதிலும் அதனை பெற்றக்கெள்ளாமையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,096,333 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,777,807 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 158 (4) உப பிரிவின் பிரகாரம் மிகை பணம் அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களில் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ஆண்டு பூராகவும் ரூபா 12,000,000 இற்கு மேற்பட்ட தொகை அவ்வாறு முதலீடு செய்யப்படாமல் 02 நடைமுறைக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களில் முதலீடு செய்து வருமானமொன்றை உழைத்துக் கொள்ள வேண்டும். | குறித்த பணத்தை துரிதமாக அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக முதலீடு செய்வதற்கு 2019 ஆம் ஆண்டிற்குரியதாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. |
| **(ஆ)** | 2018 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்க கூற்றில் தீர்வையாகாத பெறுவனவுகளாக 1993 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து ஆராய்ந்து தீர்வு செய்யப்பட வேண்டும் | இது தொடர்பாக தெளிவான சான்றுகள் இல்லாமல் இருந்ததுடன், தீர்வு செய்வதற்கு கணக்காய்வின் ஆலோசணை |

| | | |
|---|---|---|
| வரப்படும் ரூபா 410,726 மீதியை தீர்வு செய்திருக்கவில்லை. | | கோரப்படுகின்றது. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 6,612,500 | 5,480,131 | 4,375,708 | 3,395,510 | 6,125,034 | 5,805,627 | 5,495,110 | 3,144,513 |
| (ii) | வாடகை | 7,529,289 | 9,071,720 | 7,499,718 | 5,716,044 | 4,035,600 | 5,054,607 | 4,742,083 | 1,447,396 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,331,000 | 857,000 | 857,000 | - | 1,650,000 | 828,390 | 828,390 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 10,631,986 | 1,675,917 | 1,626,429 | 8,919 | 3,810,000 | 3,621,251 | 2,926,909 | 3,433,774 |
| | மொத்தம் | 26,104,775 | 17,084,768 | 14,358,855 | 9,120,473 | 15,620,634 | 15,309,875 | 13,992,492 | 8,025,683 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 4,618,850 தொகையான வீதவரி, கடை வாடகை, வீட்டு வாடகை, வாரச்சந்தைக் கட்டணங்கள், நில வரி, கடைத்தொகுதி கட்டணங்கள் நிலுவையில் ரூபா 858,500 மாத்திரம் அறவிடப்பட்டதால் நிலுவை வருமான அறவீடு திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. | நிலுவை வருமான அறவீடு தொடர்பாக நகர சபை கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | குறித்த நிலுவை பணம் 2019.06.30 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) நீதிமன்றத் தண்டப்பணம்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,854,826 நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றம் ரூபா 858,500 ஆன முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறிதத் நசபை அறவிட்டுக் கொள்ள வேண்டும். | உரிய துறைகளுக்கு கடிதங்கள் அனுப்பி இப்பணதை நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் 4.5 தொன் அளவிலான கழிவுப்பொருட்கள் ஆக இருந் போதும் அதில் அறுபது சதவீத அளவு கொம்போஸ்ட் பிரிவிற்கு அனப்பி வைக்கப்படும் அளவு திருப்திகரமான மட்டததில் காணப்படவில்லை. | சுற்றாடலுக்கு பாதகம் இல்லாத வகையில் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | கழிவுப் பொருட்களை வேறுபடுத்த வழங்குமாறு பிரதேச வாசிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் சபை ஊழியர்களும் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக நகர சபை போதியளவில் அறிந்திருக்காதிருந்ததுடன் மீளாய்வாண்டில் அது தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றவதற்கு திட்டங்கள தயாரிக்கப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்க வில்லை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 05 குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 304,607 ஆன நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய வழக்குத் தீர்ப்பு சபையிடம் இல்லாமையால் வழக்கு தீர்ப்பு நீதிமன்றத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | தலாவக்கலை பெத பேரூந்து நிலையத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் பயன்படுத்தப்படும் 05 கடைகளிலிருந்து அறசவிடப்பட வேண்டிய ரூபா 890,400 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபை கூட்டிணைப்பு குழுவில் தலைவரிடம் கோரியுள்ளதிருந்ததுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | நகர சபைக்குச் சொந்தமான கெப் வண்டி 2018 சனவரி 14 ஆந் திகதி இயங்காமல் இருந்ததுடன் திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ கை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | திருத்தம் செய்வதற்கோ கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வண்டியை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு மத்திய மாகாண பிரதான செயலாளருக்கு தகவல் அனுப்பியள்ளதாகவும் |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 பதவிகளில் 24 வெற்றிடங்கள் காணப்பட்டன. | உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை வேண்டும் | இது தொடர்பாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு தெரியப்படுத் தப்பட்டுள்ளது. |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 2016 மார்ச் 17 ஆந் திகதிய மமா.உ.ம.ஆ./2016/3 ஆம் இலக்க மத்திய மாாண உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக சபைக்குச் சொந்தமாக காணப்படும் பொது சந்தையிலுள்ள 30 கடைகளுக்காக 2007 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட வாடகை அடிப்படையாக கொண்டு 2018 ஆம் ஆண்டிற்காக வாடகை அறவிடப்பட்டிருந்தமை | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மாதந்த வாடகை திருத்தம் செய்யப்பட வேண்டும். | புதிய மதிப்பீட்டு வேலைகள் தாமதமாக இருந்தமையால் உடன்படிக்கை புதுப்பிப்பதற்கு குத்தகையாளருக்கு அறிவூட்டப்பட்டுள்ளது. |